செப்டம்பர் 2025

நல்லன எல்லாம் தரும்!

# மல்லிகை மகள்

தமிழ் இல்லங்களின் ஒளிவிளக்கு

₹40

MALLIGAI MAGAL - Tamil Monthly | September 2025 | Volume:19 | Issue:03 | Price Rs.40 | Annual Subscription Rs.480



**பிரசவ தேதி நெருங்கி விட்டதா?**
இயற்கை மருத்துவரின் ஆலோசனைகள்

**இரைப்பைப் புண்ணிலிருந்து எளிதில் விடுபட..**
டாக்டர் டிப்ஸ்

**கூடாநட்பால் தொலைந்த வாழ்க்கை!**
கலங்கும் இளம்பெண்

**இறந்த உறவுகளை இணைக்கும் ஏ.ஐ.!**

**கழிவறை ஏர் டிரையர்களில் காத்திருக்கும் ஆபத்து!**

**பெற்றோர்களின் 'அடேங்கப்பா' எதிர்பார்ப்புகள்!**
'ஐயோ பாவம்' குழந்தைகள்

## தனித்தனியே வசிக்கும் தம்பதிகள்!

வைரலாகும் புது லைஃப் ஸ்டைல்!

என்றார். அப்பாவும் சிரித்துக் கொண்டே, "ஆயிரம் பிரச்னை இருந்தாலும் கைநீட்டுறது தப்புதானே மாப்ள' என்றார். "மன்னிச்சுக்கோங்க.." என்று மாமா சொல்ல, அப்பா கையைப் பிடித்துக் கொண்டார்.. விடுங்க விடுங்க என்று!

அன்றைக்கு அப்பா, மாமா வைத்த மீன் குழம்பைச் சாப்பிட்டார்!

**இ**ரண்டாவது காட்சி..

அப்பாவுக்கு அத்தையிடமிருந்து ஒரு போன் வருகிறது. "அண்ணே, என்னால இந்த நரகத்துல ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. முடியப் புடிச்சு இழுத்துப் போட்டு அடிக்காருண்ணே.." என்று அத்தை பேசுவது போனைத் தாண்டி கேட்டது.

அப்பா அப்படியே அத்தை போனை கட் பண்ணிவிட்டு மாமாவுக்கு போன் அடித்தார்.

'யோவ், ஒனக்கு பொண்ணு குடுத்தது இப்படி போட்டு அடிக்கிறதுக்கா?'' என்று ஆரம்பிக்க, "நடந்தது என்னனு தெரியாம பேசக் கூடாது. பிள்ளைய வாய அடக்கி வளர்க்கத் தெரியல. வக்காலத்து மட்டும் வாங்க வந்துட்டாரு.." என்று மாமா எகிற வார்த்தைகள் முற்ற, கோபத்தோடு போனை வைத்தார் அப்பா.

மதுரையில் இருந்த தூரத்து உறவினருக்கு போன் செய்தார். உடனே போய் தங்கச்சிய கூட்டிட்டு வா என்று கட்டளையிட்டார். மறுநாள் காலையில் அத்தை அழுகையும் கண்ணீருமாக வீட்டுக்கு வந்துவிட்டார்.

மனக் காயம் ஆறுவதற்கு பல மாதங்கள் ஆகிவிட்டன. இப்போதும் மாமாவும் அப்பாவும் முகம் கொடுத்து பேசிக் கொள்வதில்லை!

இரண்டும் ஒரே நிகழ்வின் விளைவுதானே ஒன்றை சம்பவமாகவும் இன்னொன்றைச் 'சரித்திர'மாகவும் ஆக்கியது எது? மொபைல் போன்தான். அத்தை போன் பேசாமல் இருந்திருந்தால் அப்பா மாமாவிடம் சண்டை போட்டிருக்க மாட்டார். மாமாவும் வார்த்தைகளை விட்டிருக்க மாட்டார்.

முகம் பார்த்துப் பேசும்போது எதிரே இருப்பவரின் ரியாக்‌ஷனுக்கு ஏற்ப பேசுவோம். ஆனால், போனில் அது தெரியாது. வார்த்தைகள் சிதறிவிடும். முடியாத நேரத்தில் உடனடியாக ரியாக்ட் செய்யாமல் குறைந்தபட்சம் ஒருமணி நேரம் கழித்து போனில் பேசுவோம். நாமும் நிதானமாகப் பேசுவோம். அவர்களுடைய ஆவேசமும் குறைந்திருக்கும்.

தகவல்களைப் பரிமாறிக் கொள்ள மொபைலைப் பயன்படுத்துவோம். பிரச்னைகளைப் பேசும்போது நேரில் உரையாடுவோம்!

# அப்பாவைப் போல!

**ஒ**ரு மருத்துவமனை.. லிஃப்ட் வேலை செய்யவில்லை. ஆணும் பெண்ணுமாய் இருவர் மாடிப்படியில் இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். அப்பாவும் மகளுமாய் இருக்க வேண்டும்.

அப்பா ஒரு காலை இறக்கி ஒரு படியில் வைத்துவிட்டு, மறுகாலையும் அதே படியில் வைத்து சில நொடிகள் ஓய்வெடுத்து, பிறகு ஒரு காலை அடுத்த படியில் வைத்து, மறுகாலையும் அதே படியில் வைத்து ஓய்வெடுத்து.. என பிரம்மப்பிரயத்தனம் செய்து மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தார்.

அவர்தான் அப்படி என்றால், அவருக்கு முன்னே இறங்கி வந்துகொண்டிருந்த மகளும் அச்சு அசலாக அப்பா இறங்குவதைப் போலவே அதே ஸ்டைலில் கிட்டதட்ட அதே நிதானத்தோடு இறங்கிக் கொண்டிருந்தார்.

அப்பா இறங்கி வருவதற்குள் மகள் கொஞ்சம் விரைவாக கீழே இறங்கி விட்டதால், அங்கிருந்த ஒரு நர்ஸ் அந்தப் பெண்ணிடம், "உங்க இரண்டு பேருக்கும் கால்களில் ஒரே மாதிரியான பிரச்சனையா ?" என்று கேட்டார்.

மகள் "இல்லை.. இல்லை.. அவர் என் அப்பா. அவருக்கு கம்பெனி கொடுக்கவே அவர் எப்படி இறங்க வேண்டுமோ அப்படியே நானும் இறங்கி வருகிறேன். இல்லை என்றால், கால் வலியையும் பார்க்காமல் வேகமாக இறங்கி கால் பிரச்னையை இன்னும் தீவிரமாக்கிக் கொள்வார். நானும் அவரைப் போலவே இறங்கினால், அவர் மெதுவாக என்னுடன் சேர்ந்து இறங்குவார். அத்துடன் கண் முன்னே ஒரு காட்சியைப் பார்க்கும்போது அதை அப்படியே பின்பற்றவும் தோன்றும். மேலும், அப்படி இறங்குவது ஒன்றும் பிரச்சனை அல்ல, நல்லபடியாக கால் இருப்பவர்களும் அப்படி இறங்கலாம் என பாசிட்டிவாக அப்பாவுக்கும் தோன்றச் செய்யவே, அப்பா இறங்குவதைப் போலவே நானும் இறங்கி வருகிறேன்.." என்றார்.

அந்த நர்ஸ் ஆச்சர்யமாக அந்தப் பெண்ணை பார்த்தார். இதற்குள் அப்பாவும் கீழிறங்கி வந்துவிட, அவரிடம் "கொடுத்து வைத்தவர் சார் நீங்கள்" என்று சொல்லிவிட்டு வேகமாக வேலையைப் பார்க்க சென்றுவிட்டார்.

அப்பா எதுவும் புரியாமல் "என்ன ?" என்று மகளைப் பார்த்துக் கேட்க, "ஒன்றுமில்லைப்பா... பொதுவாகத்தான் சொல்லிவிட்டு போகிறார்" என்று சொல்லிவிட்டு டாக்டர் அறையை நோக்கி அப்பாவோடு நடந்தார்.. அப்பா எப்படி நடந்து செல்கிறாரோ, அப்படியே!

– காம்கேர் கே.புவனேஸ்வரி